Recruitment for the post of Office Assistant at Directorate of Medical and Rural Health Services, Chennai- 06.

1. Download Notification and Instruction

2. Apply through Register Post.

(or)

Submit the application in Person.

## மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்

## அலுவலக உதவியாளர் பதவிக்கான விளம்பர அறிவிக்கை

சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்கக அலுவலகத்தில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களை நியமன அதிகாரி, சென்னை கூடுதல் இயக்குநர்(நிர்வாகம்) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலரால் நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 16.12.2020 முதல் 31.12.2020 வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1 | பதவியின் பெயர் | – | அலுவலக உதவியாளர் |
| 2 | பணியின் தன்மை | – | மருத்துவம் மற்றம் ஊரக நலப்பணிகள் இயக்ககத்தில் பணிபுரியும் உயர் அலுவலர்களுக்கு அடிப்படைப் பணிகளை மேற்கொள்வதில் உதவி செய்தல் மற்றும் அலுவலக நடைமுறை பணிகளில் உதவிடுதல். |
| 3 | சம்பளம் | – | ₹ 15700 – 50000/– (Level-1) என்ற சம்பள ஏற்ற முறையில் அரசு நிர்ணயம் செய்யும் படிகளுடன் |
| 4 | வயது | – | 01.07.2020 அன்று 18 வயது பூர்த்தியடைந்திருக்க வேண்டும். |
| இனசுழற்சி முறை | | | அதிகபட்ச வயது வரம்பு (01.07.2020 அன்றுள்ளவாறு) |
| பொதுப்பிரிவு | | | 30 வயதுக்குள் |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பு, பிற்படுத்தப்பட்ட வகுப்பு(முஸ்லீம்), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மற்றும் சீர்மரபினர் (BC, BC(M), MBC) | | | 32 வயதுக்குள் |
| ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதரவற்ற விதவை (அனைத்து வகுப்பினர்) | | | 35 வயதுக்குள் |
| முன்னாள் இராணுவத்தினர் – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு | | | 53 வயதுக்குள் |
| முன்னாள் இராணுவத்தினர் – ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு அல்லாதோர் (Other than SC/ST/BC) | | | 48 வயதுக்குள் |
| மாற்றுத்திறனாளிகள் | | | வயது உச்ச வரம்புடன் கூடுதலாக 10 ஆண்டுகள் |
| 5 | மொத்த பணியிடங்கள் | | 25 எண்ணிக்கை |

| | | | |
|---|---|---|---|
| 6 | இட ஒதுக்கீடு விவரங்கள் | | |

| GT/OC | BC(M) | BC | MBC/DNC | SC | SC(A) | ST | TOTAL |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | 1 | 7 | 5 | 4 | 1 | 0 | 25 |

| | | | |
|---|---|---|---|
| 7 | கல்வித்தகுதி | – | எட்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் (விதி 5 (2)(a)) |
| 8 | விண்ணப்பிக்கும் முறை | – | இப்பணிக்கான விண்ணப்பங்களை www.tnhealth.tn.gov.in என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து பதிவஞ்சல் மூலமாகவோ அல்லது இவ்வலுவலகத்தில் நேரிடையாகவோ வந்து சமர்ப்பிக்கலாம். |
| 9 | | | சென்னை மாவட்டத்தில் குடியிருப்பவராக இருக்க வேண்டும். |
| 10 | கடைசி நாள் | – | 31.12.2020 பிற்பகல் 05.45க்குள் (காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்பட மாட்டாது) |

மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ, நேர்காணலை ஒத்தி வைக்கவோ நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யவோ, சென்னை, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், கூடுதல் இயக்குநர்(நிர்வாகம்) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது. மேலும் தேவைப்படின் தேர்வர்களுக்கு எழுத்துத்தேர்வும் நடத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இத்துடன் தெரிவிக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரையை தவறாது படித்து பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

11/12/2020

இயக்குநர்

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்,

தேனாம்பேட்டை, சென்னை–06

**மாதிரி படிவம்**

**மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம், சென்னை–06**

**அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கான விண்ணப்பம்**

Passport Size Photo

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | |
| 2. | தகப்பனார் / கணவர் பெயர் | : | |
| 3. | இருப்பிட முகவரி | : | |
| 4. | கைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் (இருப்பின்) | : | |
| 5. | கல்வித் தகுதி (சான்றுடன்) | : | |
| 6. | பிறந்த தேதி மற்றும் வயது | : | |
| 7. | ஆதார் எண் | : | |
| 8. | சாதி/மதம் (சான்றுடன்) | : | |
| 9. | மனுதாரர் மாற்றுத் திறனாளி (ஆம்/இல்லை)<br>ஆம் எனில் சான்று | : | |
| 10. | மனுதாரர் ஆதரவற்ற விதவை (ஆம்/இல்லை)<br>ஆம் எனில் சான்று | : | |
| 11. | முன்னாள் இராணுவத்தினர் (ஆம்/இல்லை)<br>ஆம் எனில் சான்று | : | |

விண்ணப்பதாரர் கையொப்பம்

விண்ணப்பதாரர் சமீபத்திய புகைப்படத்துடன் மேற்காணும் விண்ணப்பப்படிவத்தில் பூர்த்தி செய்து, உரிய சான்றிதழ் நகல்களுடன் கூடுதல் இயக்குநர் (நிர்வாகம்) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள், தேனாம்பேட்டை, சென்னை–06 என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிட வேண்டும். மேற்படி, விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியுடையவர்களுக்கு தேர்வு/நேர்முகத் தேர்வுக்கு வருமாறு அழைப்பாணை அனுப்பப்படும்.

## Instructions to Applicants

விண்ணப்பிப்பதற்க்கான வழிமுறைகள்

1. Candidates should download the application in the Health and Family Welfare Department Web site www.tnhealth.tn.gov.in

   விண்ணப்பதாரர்கள் www.tnhealth.tn.gov.in மூலம் இணைய வழியே மாதிரி விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்ய வேண்டும்.

2. For applying, the Candidates should fill the form clearly without any Correction with signature & duly affixing the recent passport photo can sent by resister post or in person.

   விண்ணப்பதாரர்கள் தங்களது புகைப்படம் மற்றும் கையொப்ப இட்ட படிவத்தை எந்தவித தவறும் திருத்தம் இல்லாது பதிவுதபால் அல்லது நேரடியாகவோ விண்ணப்பிக்கலாம்

3. Candidates should provide their personal detail and submit the application at an earliest. After download the duly filled application without any correction.

   விண்ணப்பதாரர்கள் தங்களது விவரங்களை பதிவிறக்கம் செய்து தவறு இல்லாமல் நிரப்பப்பட்ட விண்ணப்பப் படிவத்தை உடன் அனுப்பப்பட வேண்டும்.

4. Please note that all the particulars mentioned in the application including Name of the Candidates, Post Applied for Communal Category, Date of Birth, Address, Mobile Number etc., will be considered as final.

   அலுவலக உதவியாளர் பதவிக்கான விண்ணப்பத்தில் விண்ணப்பதாரர்கள் தரும் பெயர், விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், சாதிப்பிரிவு, பிறந்ததேதி, முகவரி, மின்னஞ்சல் முகவரி, போன்ற விவரங்கள் இறுதியானவை என கருதப்படும்.

5. Candidates are hence requested to fill in the application form with utmost care as no Correspondence regarding change of details will be entertained.

   விண்ணப்பதாரர்கள் தங்களது விவரங்களை உள்ளீடு செய்யும் போது மிகுந்த கவனத்துடன் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விண்ணப்பத்தினை மாற்றம் செய்யக்கோரி பெறப்படும் எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்படமாட்டது.

**Note:**

1. Candidates are advised in their own interest to apply much before the closing date and not to wait till the last date to avoid the possibility of /inability/ failure.

   விண்ணப்பதாரர்கள் அலுவலக உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க குறிப்பிட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாளில் அதிகப்படியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் போது விண்ணப்பம் சமர்ப்பிப்பதில் தாமதமோ அல்லது பிரச்சனைகளோ எழ வாய்ப்புள்ளது.

2. Directorate of Medical and Rural Health Services, Chennai does not assume any responsibility for the Candidates not being able to submit their application within the last date on account of the aforesaid reasons or for any other reason beyond the last date.

   மேற்கூறிய காரணங்களால் விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை கடைசி கட்ட நாள்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் பொறுப்பாகாது.

3. Request for change/ correction in any particulars in the Application Form shall not be entertained under any circumstances after receiving the application Directorate of Medical and Rural Health Services, Chennai will not be responsible for any consequences arising out of furnishing of incorrect and incomplete details in the application or omission to provide the required details in the application form.

   விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாளுக்குப்பின்னர் விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை எந்தவொரு கோரிக்கையும் பரிசீலிக்கப்படமாட்டாது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தில் தரும் தவறான, முழுமையற்ற விவரங்கள் அல்லது விடுபட்டுப்போன விவரங்களுக்கு மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் பொறுப்பாகாது.

4. Any clarification may be obtained from the Help desk Nos 044-29510156/57

   கூடுதல் விவரங்கள் அல்லது சந்தேகங்களுக்கு 044-29510156/57 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.